**<u>சுருக்கம்</u>**

சிலைகள் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – இராமநாதபுரம் மாவட்டம் – முதுகுளத்தூர் வட்டம் – கீழத்தூவல் கிராமம் – புல எண். 376–22–இல் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் சிலையைப் புதுப்பித்து அமைத்தது – பின்னேற்பு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ.2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.43 நாள்: 18.05.2010

<u>படிக்கப்பட்டவை</u>:

1. அரசு கடித எண்.15611/சி3/94–6, ஊரக வளர்ச்சித் (சி.3) துறை, நாள் 12.06.1995.
2. அரசு ஆணை (நிலை) எண்.248, ஊரக வளர்ச்சித் (சி.2) துறை, நாள் 23.11.1998.
3. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண். ஜி4/22237/2010, நாள் 11.05.2010.

* * * * *

<u>ஆணை</u>:

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கீழத்தூவல் கிராமத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த பசும்பொன் தேவர் திருமகனாரின் சிலையைப் புதுப்பித்து அமைக்கப்பட்டதற்கு அனுமதி அளிக்கக்கோரி கீழத்தூவல் கிராமத்தைச் சேர்ந்த திரு.டி. இராமசாமி என்பவர் 08.04.2010 அன்று கீழத்தூவல் பொதுமக்கள் சார்பாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியருக்கு மனு செய்திருந்தார்.

2. பசும்பொன் தேவர் திருமகனாரின் சிலையைப் புதுப்பித்து அமைத்தது சம்பந்தமாக 29.03.2010 அன்று முதுகுளத்தூர் வட்டாட்சியர் தலைமையில் கமுதி உட்கோட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் பரமக்குடி உட்கோட்ட காவல் துறை கண்காணிப்பாளர் (பொறுப்பு), கீழத்தூவல் காவல் சார் ஆய்வாளர், மனுதாரர் மற்றும் கிராமப் பொதுமக்கள் முன்னிலையில் முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில் அரசின் அனுமதியின்றி தேவர் திருமகனாரின் வெண்கலச் சிலையை வைத்தது தவறுதான் எனவும், அதற்காக அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு பொதுமக்கள் கட்டுப்படுவது எனவும் அரசு அனுமதி கிடைத்த பிறகு மேற்கண்ட சிலைக்கு கும்பாபிஷேகம் நடத்துவது எனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, இச்சிலையினை இவ்விடத்தில் நிறுவப்பட்டதனைத் திறந்து வைக்க அனுமதிக்கலாமென முதுகுளத்தூர் வட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.

3. முதுகுளத்தூர் வட்டம், கீழத்தூவல் கிராமத்தில் புல எண். 376–22–இல் விஸ்தீரணம் 0.01.08 சதுர மீட்டர் உள்ள இடத்தில் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் வெண்கலத்தாலான சிலையை அமைத்ததால் சட்டம், ஒழுங்கு பிரச்சனையோ, அமைதியற்ற சூழ்நிலையோ ஏற்பட வாய்ப்பில்லை என்று தெரிவித்து மேற்படி சிலையை அமைத்ததற்கு அனுமதி வழங்கலாம் எனப் பரமக்குடி வருவாய்க் கோட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

4. இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏற்கனவே இருந்த தேவர் சிலை 1972ம் ஆண்டு அமைக்கப்பட்டதால் அது பழுதடைந்துவிட்டதால் புதியதாக 7 அடி உயரமுள்ள வெண்கலச் சிலையினை தேவர் சமுதாயத்தினர் அமைத்துள்ளதற்கு அனுமதி அளிக்கப் பரிந்துரை செய்தும், இந்தச் சிலை அமைப்பதால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் ஏற்பட வாய்ப்பில்லையெனவும் மேற்படி இடத்தில் சிலை அமைப்பதற்கு ஆட்சேபனை இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

5. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூன்றில் படிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் பரமக்குடி கோட்டாட்சியர் ஆகியோர் தேவர் திருமகனாரின் சிலை திறப்பதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்பு இல்லையெனத் தெரிவித்துள்ளதாலும், கீழத்தூவல் குரூப் நத்தம் புல எண்.376–22 விஸ்தீரணம் 0.01.08 சதுர மீட்டரில் மறவர் சங்கத்திற்குப் பாத்தியப்பட்ட புதிதாகக் கட்டப்பட்ட கலையரங்கத்தின் மேல் பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் சிலையை அமைத்ததற்கு அரசு அனுமதி வழங்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்.

6. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் சிலை அமைப்பது குறித்து அரசாணை (நிலை) எண். 248, ஊரக வளர்ச்சி, நாள் 23.11.1998–இல் உள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

1. சிலை, நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு போன்றவை எதுவாயினும் அரசின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும்.

2. ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றைப் பொறுத்தமட்டிலும் அச்சிலைகளை நிறுவியவர்களே (சிலை வைத்த சங்கம், பிரிவு, தனிப்பட்டவர் போன்றவர்) பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகள் சீர்குலையாமலிருக்க, அச்சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவதை தேவையெனக் கருதப்பட்டால், இது குறித்து அரசிடம் ஆணை பெற்ற பின் சம்மந்தப்பட்ட தனி நபர் அமைப்பு போன்றவற்றால் மாற்றி அமைக்கப்படலாம்.

4. மேலே குறிப்பிட்டபடி, சிலை வைப்பது தொடர்பாக வெளியிடப்படும் ஆணைகள் நினைவுத்தூண், நினைவு மண்டபம், நினைவு வளைவு ஆகியவை அமைப்பதற்கும் பொருந்தும்.

7. அரசு நன்கு ஆய்வு செய்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையினை ஏற்று, பத்தி–6–இல் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், கீழத்தூவல் கிராமம் நத்தம் புல எண். 376–22 விஸ்தீரணம் 0.01.08 சதுர மீட்டரில் மறவர் சங்கத்திற்குப் பாத்தியப்பட்ட புதியதாகக்

..3..

கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தின் மேல் வெண்கலத்தாலான பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களின் சிலையைப் புதுப்பித்து அமைத்ததற்கு பின்னேற்பு அனுமதி வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை,
சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
இராமநாதபுரம் மாவட்டம்.
மாவட்ட காவல் கண்காணிப்பாளர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

நகல்
பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.